# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(தேசிய மறு நிர்ணய தரமதிப்பீட்டுக் குழுவினரால் 'B' தரம் மற்றும் முதல் நிலை பெற்றது)

**காரைக்குடி - 630 003.**





அன்பு அறம் பணி

# ஆண்டு மலர்



2018
2019

# அழகப்பா அரசு கலைக்கல்லூரி




முனைவர். **மா. இராஜேந்திரன்** M.Com., Ph.D.,

முதல்வர்

# அழகப்பா அரசு கலைக் கல்லூரி

(தேசிய மறு நிர்ணய தரமதிப்பீட்டுக் குழுவினரால் ‘B’ தரம் மற்றும் முதல் நிலை பெற்றது)

**காரைக்குடி** - 630 003.



# ஆண்டு மலர்

2018 - 2019

# ஆண்டு மலருக்குள் அடியெடுத்து வைக்கும் முன்

அன்புடையீர்

வணக்கம், காரைச்செடியைக் கட்டழித்துக் காரைக்குடியைக் கல்விக்குடியாய் மாற்றியவர் வள்ளல் அழகப்பர்; மாணவக் கண்மணிகள் அடிப்படைக்கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்விவரை ஓரிடத்தில் படித்து மேன்மைபெற வழிவகுத்த விழுத்தெய்வம்; மானுடச் சமூகத்தின் அறியாமை இருளகற்றிடவும் இன்னல் தீர்த்திடவும் கலங்கரை விளக்காய் நின்ற கொடைஞன். இச்சிறப்புடைய வள்ளலின் கல்வி நிறுவனத்தில் பயின்றவர்கள் பல்வேறு துறைகளில் பெரும்பேர் பெற்று வாழ்ந்து வருகின்றார். இக்கல்வி நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஆற்றல்சால் ஆசிரியப் பெருமக்கள், தங்கள் கடமையைக் கண்ணெனக் கருதிச் செயலாற்றுபவர்கள். இங்கு பயிலும் மாணாக்கர்கள் நல்லொழுக்கமும் நல்லறிவும் மிக்கவர்கள். இவர்களின் படைப்புத்திறனை வெளிக்கொணரும் வகையில் ஒவ்வொரு ஆண்டிலும் இக்கல்லூரியில் ஆண்டுமலர் மலர்கிறது. இவ்வகையில் 2018 - 2019 ஆம் அண்டிற்கான ஆண்டுமலரில் மாணாக்கரின் பல்வேறு திறப்பாடுகள் வெளிப்படுகின்றன. அவற்றின் கருத்தாக்கத்தை நுண்ணிதின் நுகர்ந்து அறிவில் மேம்பட்ட புதியதோர் உலகம் படைத்திட உத்வேகம் கொள்ளுங்கள்!

அன்புடன்

**பதிப்பாசிரியர் மற்றும் மலர்க்குழுவினர்**

# ஆண்டறிக்கை - 2018 - 2019

2018-2019 ஆம் கல்வியாண்டின் நம் சாதனைகள், நிகழ்வுகள் பற்றிய ஆண்டரிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**முதல்வர்**

இக்கல்வியாண்டின் தொடக்க நாளாகிய **01.06.2018** முதல் **15.06.2018** வரை இக்கல்லூரியின் பொறுப்பு முதல்வராகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு.**ம.துரை** அவர்கள் பணியாற்றினார். **15.06.2018** முதல் இன்று வரை முனைவர் **மா.இராஜேந்திரன்** ஆகிய நான் முதல்வராகப் பணிபுரிந்து வருகின்றேன்.

**ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்**

இக்கல்லூரியில் **87** ஆசிரியர்களும், **9** அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களும், **31** முதல் சழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **37,** இரண்டாம் சுழற்சி கௌரவ விரிவுரையாளர்களும், **7,**பெற்றோர் ஆசிரியர்கழக ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆசிரியரல்லாப் பணியாளர்கள் **33** பேரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகைப் பணியாளர்கள் **2** பேரும், பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியரல்லாப் பணியாளர்கள் **7** பேரும் பணியாற்றி வருகின்றனர்.

**மாணவ, மாணவியர்**

இக்கல்லூரியில் **1068** மாணவர்களும், **2748** மாணவிகளும் ஆக மொத்தம் **3816** மாணவர்கள் பயின்று வருகின்றனர். **2017-18** ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற பல்கலைக்கழகத் தேர்வுகளில் நம் கல்லூரியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த **25** இளநிலை மாணவர்களும், **19** முதுநிலை மாணவர்களும், **5** ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களும் பல்கலைக்கழகத்தர வரிசைப்பட்டியலில் இடம்பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இடப்பெயர்வு மற்றும் பணிநியமனம்**

நம் கல்லூரியில் பணியாற்றிய கீழ்க்கண்ட உதவிப் பேராசிரியர்கள் பல்வேறு கல்லூரிகளுக்கு விருப்ப இடப்பெயர்வு பெற்றுச் சென்றுள்ளனர். அவர்கள்

முனைவர் **கொ. இளங்கோவன்** (வேதியியல் துறை)

முனைவர் **க. அனுராதா** (வேதியியல் துறை)

முனைவர் **வி.ச. ஈஸ்வரி** (தமிழ்த்துறை)

முனைவர் **ஆர். கிருஸ்டிஅமுதா** (விலங்கியல் துறை)

என்போராவார். இப்பேராசிரியர்கள் முறையே மதுரை மீனாட்சி மகளிர் கல்லூரி, திண்டுக்கல் எம்.வி.எம் அரசு கலைக்கல்லூரிகளுக்குப் பணியிடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இக்கல்லூரியில் பணியாற்றிய உடற்கல்வி இயக்குநர் முனைவர். **ஜ. முத்துசுப்பிரமணியன்** அவர்கள் நிர்வாகக் காரணங்களுக்காக பூலாங்குறிச்சி வ.செ.சிவ. அரசு கலைக்கல்லூரிக்குப் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இக்கல்வியாண்டில் நான் சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியிலிருந்து பணியிட மாறுதல் பெற்று **15.06.2018** முதல் இக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகிறேன். இக்கல்வியாண்டில்

பல்வேறு கல்லூரியிலிருந்து பேராசிரியர்கள் இடப்பெயர்வு பெற்று நம் கல்லூரிக்கு வருகை தந்துப் பணியாற்றி வருகின்றனர். திரு.**வி.விஜய்** (வேதியியல்துறை) பூலாங்குறிச்சி வ.செ.சிவ. அரசு கல்லூரியிலிருந்து இடப்பெயர்வு பெற்று நம் கல்லூரிக்கு வந்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகைப் பேராசிரியர் முனைவர் **சு.திருமாறன்** ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் பெற்று நம் கல்லூரி கணினி பயன்பாட்டுத்துறையில் பணியாற்றி வருகிறார்.

**பணிநிறைவு பெறுவோர்**

இக்கல்லூரியில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற கல்லூரி முதல்வர் முனைவர். **மா.இராஜேந்திரன்**, வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **ஜா.அல்போிஸ்,** வாரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **செ. செல்வராஜ்,** பொருளியல்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **மோ.ஜனார்த்தனன் பிள்ளை,** சிறப்புநிலை ஆய்வக உதவியாளர்களான திரு.**கு.இராஜேந்திரன்,** திரு.**ரெ.மாரீஸ்வரன்**, திரு.**இரா.மருதுபாண்டியன்** மற்றும் பதிவறை உதவியாளர், திரு. **ரா. தெய்வேந்திரன்** ஆகியோர் இக்கல்வியாண்டில் பணிநிறைவு பெறுகின்றனர்.

**முனைவர் பட்டம் பெற்றோர்**

இக்கல்வியாண்டில் கீழ்க்கண்ட இணை, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். அவர்கள்,

**கா.செ.சந்திரசேகரன்** (கணினி அறிவியல் இணைப்பேராசிரியர்)

**அ. பாலசுப்பிரமணியன்** (கணிதவியல் உதவிப் பேராசிரியர்)

**ப. வேலாயுதராஜா** (வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர்)

என்போராவர்.

**நிதிஒதுக்கீடு**

தமிழக அரசின் சிறப்புத் திட்டப் பயன்கள் நிதி ஒதுக்கீட்டில் இயந்திரம் மற்றும் சாதனங்கள் பராமரிப்புக்காக ரூ.45,000/-மும், ஆய்வக உபகரணங்களுக்காக வழங்கிய நிதி ரூ. 2,25,000/- மு ம் , புத்தகங்கள் வாங்குவதற்காக வழங்கிய நிதி ரூ.2,50,000/-மும், மின்சாதனப் பராமரிப்புக்காக வழங்கிய நிதி ரூ,6,70,000/-மும் ஒதுக்கீடு செய்யப்பெற்று பொதுப்பணித் துறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரிக்கு 2018 - 2019 ஆம் நிதியாண்டில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.**கேஆர்.இராமசாமி** அவர்களின் பரிந்துரையின் பேரில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.**20.00** லட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நினைவு கட்டடமாக பி.சி.ஏ. துறைக்காகப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.**124.00** லட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வியாண்டில் **353** மீட்டர் நீள சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ரூ.**24.01** லட்சம் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் பராமரிப்புப் பணிக்காக **(Civil** மற்றும் **Electric)** ரூ.**26.00** லட்சம் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களின் ஆய்வுத் திட்டப்பணிகள்**

இக்கல்வியாண்டில் கீழ்க்கண்ட பேராசிரியர்கள் பல்வேறு அமைப்புகளிலிருந்து நிதி பெற்றுத் தம் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | ஆசிரியர் பெயர் | துறை | நிதி வழங்கியோர் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | முனைவர் R. **ஆறுமுகம்** | தாவரவியல் | யு.ஜி.சி. | ரூ. 1,70,000/- |
| 2. | முனைவர் N. **கவிதா** | ஆங்கிலம் | யு.ஜி.சி. | ரூ. 95,000/- |
| 3. | முனைவர் P. **உதயகணேசன்** | புவி அமைப்பியல் | யு.ஜி.சி. | ரூ. 12,76,000/- |
| 4. | முனைவர் A. **நாகேந்திரன்** | வேதியியல் | யு.ஜி.சி. | ரூ. 14,63,600/- |
| 5. | முனைவர் N. **தினகரன்** | வேதியியல் | யு.ஜி.சி. | ரூ. 6,00,000/- |

**கல்வி உதவித்தொகை**

இக்கல்லூரியில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் 1706 பேருக்கு கல்வி உதவித்தொகையாக (புதியது மற்றும் புதுப்பித்தல்) ரூ. 20,33,920/- வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடி இனத்தைச் சார்ந்த 590 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக (புதியது மற்றும் புதுப்பித்தல்) ரூ. 17,97,489/- வழங்கப்பட்டுள்ளது. வரலாறு பாடத்தைத் தமிழ் வழியில் பயிலும் 176 மாணவர்களுக்கு ரூ.1,58,400/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டள்ளது.

**பிற**

இக்கல்வியாண்டில் கல்லூரி பட்டமளிப்பு விழா 16.03.2019 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்றது. இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் H. **குருமல்லேஷ்பிரபு** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திப் பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார். இளநிலைப் பட்டதாரிகள் 673 பேர், முதுநிலைப் பட்டதாரிகள் 178 பேர், ஆய்வியல் நிறைஞர் பட்டதாரிகள் 32 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா.சிதம்பரம்,** அழகப்பா பல்கலைக்கழகத்தின் செனட் சபைக்குத் தமிழக ஆளுநரின் பரிந்துரை உறுப்பினராக 2018-2021 ஆண்டிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும் எனும் பொருண்மையில் 09.11.2018 முதல் 15.11.2018 வரை இலங்கை, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற பன்னாட்டக் கருத்தரங்கில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்கள் **திரு.ம.துரை,** முனைவர் **மா.சிதம்பரம்,** தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் **ப.சு.செல்வமீனா,** முனைவர் **க.சொல்லேருழவன்,** முனைவர் **அ. பாரதிராணி,** வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் திரு.**வை.குணசேகரன்** ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி நம் கல்லூரிக்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர். இம்மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவராகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா.சிதம்பரம்** திறம்படப் பணியாற்றியுள்ளார்.

ஆப்பிரிக்கக் கண்டம் ஜாம்பியா நாட்டிற்குக் கருத்தரங்கம் மற்றும் இலக்கியச் சொற்பொழிவிற்காகத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா.சிதம்பரம்** இக்கல்வியாண்டில் சென்று வந்துள்ளார்.

வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **ப. வேலாயுதராஜா** குருந்தம்பட்டு, காரையூர், கோட்டைவயல், சித்தம்பட்டி ஆகிய ஊர்களில் கள ஆய்வு நடத்தி பாண்டியர்கால புதிய கல்வெட்டுக்களைக் கண்டறிந்ததோடு 2018 ஜுலை மாதம் திருவண்ணாமலையில் நடைபெற்ற இந்திய தொல்லியல் கழக மாநாட்டில் கலந்து கொண்டார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய தமிழ்நாடு 50-ஆம் ஆண்டு பொன்விழாவில் இளம் தமிழ் ஆய்வாளர் விருதினை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **க.அமுதா** பெற்றுள்ளார்.

இக்கல்லூரியில் செயல்படும் வேலைவாய்ப்புப் பயிற்சித்துறையின் வழிகாட்டுதலில் அரவிந்த் கண் மருத்தவமனை நடத்திய வேலைவாய்ப்புப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு மூன்றாமாண்டு வி ல ங் கி ய ல் மாணவன் செல்வன் **யோகேஸ்வரன்** தேவகோட்டை அரவிந்த் கண் மருத்துவமனையில் பணிவாய்ப்புப் பெற்றுள்ளார்.

நமது கல்லூரியில் இயங்கும் செஞ்சிலுவை சங்கம் சார்பாக 21.02.2019 அன்று ஒருநாள் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் நூறு மாணவர்கள் கலந்து கொண்ட பயன்பெற்றனர். 05.03.2019 அன்று அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற செஞ்சிலுவை சங்க மாணவர்களுக்கான கருத்தரங்கில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

இக்கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **மா.சிதம்பரம்,** காரைக்குடி கம்பன் கழக இணைச்செயலராக இருந்து இலக்கியப்பணி ஆற்றிவருவதோடு, இராமநாதபுரம் கம்பன் கழகத்தின் க ம் ப ன் காவலர் விருதினையும், குடியாத்தம் கம்பன் கழகத்தில் கம்பர் மாமணி என்ற விருதினையும் பெற்றுள்ளார். இவரின் கந்தபுராணத்தில் சித்தாந்த செம்பொருள் என்னும் ஆய்வுக்கட்டுரை கொழும்புவில் நடைபெற்ற அனைத்துலக முருக இலக்கிய மாநாட்டுக் கருத்தரங்கில் தேர்வு பெற்ற ஆய்வு நூலில் வெளியிடப்பெற்றுள்ளது.

இக்கல்லூரியில் பணியாற்றும் 37 ஆசிரியர்கள் தங்களின் பணிமேம்பாட்டிற்குத் தேவையான புத்தாக்கப் பயிற்சியினை இக்கல்வியாண்டில் முடித்துள்ளனர். இக்கல்லூரியின் ஆசிரியர்கள் பலர் பல்வேறு இடங்களில் நடைபெற்ற பன்னாட்டு, தேசிய அளவிலான கருத்தரங்களில் பங்கு பெற்று ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து சிறப்பு செய்துள்ளனர்.

**நன்றியுரை**

இக்கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து வரும் தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவிற்கும், மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும், கல்லூரி உள்கட்டமைப்பு வசதி தொடர்பான பணிகளைச் செய்து வரும் பொதுப்பணித்துறையினருக்கும், நகரின் முக்கிய பிரமுகர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் மற்றும் இக்கல்லூரியின் பெருமையையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கத் தொடர்ந்து பாடுபட்டுவரும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இளங்கலை, முதுகலைத் தமிழ் மன்ற நிகழ்வுகள்


| | | |
|---|---|---|
| முதுகலைமன்ற ஒருங்கிணைப்பாளர் | : | முனைவர் **இரா. குமார்** (இணைப்பேராசிரியர்) |
| இளங்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் | : | முனைவர் **க. அமுதா** (உதவிப்பேராசிரியர்) |
| முதுகலைமன்றச் செயலர் | : | **ப. இளம்பரிதி** (முதுகலை இரண்டாமாண்டு) |
| இளங்கலை மன்றச் செயலர் | : | **மு. பிரியா** (இளங்கலை மூன்றாமாண்டு) |

அழகப்பா அரசு கலைக்கல்லூரி, தமிழ் உயராய்வு மையத்தில் இளங்கலை, முதுகலைத்தமிழ் மன்ற தொடக்க விழா 22.12.2018 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி உமையாள் கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவினைக் கல்லூரி முதல்வர் முனைவர் **மா.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார். தமிழ்த்துறைத் தலைவர் பேரா.**ம.துரை** அவர்கள் முன்னிலை உரையாற்றினார், சிறப்பு விருந்தினராகக் கலைமாணி ஆக்காட்டி **ஆறுமுகம்** அவர்கள் கலந்து கொண்டு நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்பினை எடுத்துக் கூறியதுடன் உடன் அழைத்து வந்து இன்னிசைக் கலைஞர்களுடன் சிறப்பான ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை நடத்தி எல்லோரையும் மகிழ்வித்தார். இவ்விழாவினை முதுகலை மன்றப் பொறுப்பாசிரியர் முனைவர். **இரா.குமார்,** இளங்கலைத் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் **க.அமுதா** அவர்களும் சிறப்பாக நடத்தினர். இம்மன்றத்தின் இளங்கலை, முதுகலை மன்றச் செயலர்களான **மு. பிரியா, ப. இளம்பரிதி** ஆகியோர் இம்மன்ற விழாச்சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்தனர்.

தமிழ் மன்றத்தின் இரண்டாம் விழா 21.01.2019 திங்கட்கிழமை 9.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் பேரா.**ம.துரை** அவர்கள் முன்னிலையுரை நிகழ்த்தினார். கல்லூரியின் முதல்வர். முனைவர் **மா.இராஜேந்திரன்** தலைமையுரையாற்றினார். மேனாள் நூலகரும், இலக்கியப் படைப்பாளருமான திரு.**இரா.வீரராகவன்** அவர்கள் கல்வியின் சிறப்புக்குறித்தும் கற்றலின் அவசியம் குறித்தும் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து 2017-2018 ஆம் கல்வியாண்டில் இளங்கலை, முதுகலைத் தமிழில் முதல்மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் மாநில அளவில் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் **பிரபாகரனுக்கும்** சிறப்புச் செய்தார். இவ்விழாவினை முதுகலை மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர்.**இரா.குமார்,** இளங்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர். **க. அமுதா** ஆகியோர் சிறக்கச் செய்தனர். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். மேனாள் நூலகர் திரு. **இரா. வீரராகவன்,** மேனாள் தமிழ் இணைப் பேராசிரியர் **க. கண்ணாத்தாள்** இருவரும் முறையே இளங்கலை, முதுகலை பாடப்பிரிவில் முதலிடம் பெறுபவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.







அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி-3

தமிழ் உயராய்வு மையம்


இளங்கலை, முதுகலை
தமிழ்மன்றத் தொடக்க விழா
அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம். இக்கல்லூரி தமிழ் உயராய்வு மையத்தின் இளங்கலை, முதுகலை தமிழ் மன்றத் தொடக்கவிழா எதிர்வரும் 22.12.2018 - சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி உமையாள் கலையரங்கில் நடைபெற உள்ளது. இவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் மா.இராஜேந்திரன் அவர்கள் தலைமையேற்க உள்ளார். கலைமாமணி ஆக்காட்டி ஆறுமுகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க உள்ளார்.

அனைவரும் வருக! அருந்தமிழ்த் தேன் பருக!

இவண்,
துறைத் தலைவர், பேராசிரியர்கள்
மற்றும்
மாணவ – மாணவியர்
தமிழ்த்துறை



இளங்கலை, முதுகலை
தமிழ் மன்றத் தொடக்க விழா

நாள்: 22.12.2018 - சனிக்கிழமை இடம்: உமையாள் கலையரங்கம்

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | |
| வள்ளல் வாழ்த்து | : | |
| வரவேற்புரை | : | முனைவர் **இரா.குமார்**<br>முதுகலைத் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் |
| தலைமையுரை | : | முனைவர் **மா.இராஜேந்திரன்**<br>முதல்வர்<br>அழகப்பா அரசு கலைக்கல்லூரி,<br>காரைக்குடி – 3. |
| முன்னிலையுரை | : | பேராசிரியர் **ம.துரை**<br>தமிழ்த் துறைத்தலைவர் |
| சிறப்பு விருந்தினர் | : | கலைமாமணி ஆக்காட்டி **ஆறுமுகம்**<br>திருமயம் |
| நன்றியுரை | : | முனைவர் **க.அமுதா**<br>இளங்கலைத் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் |
| நாட்டுப்பண் | : | |




தமிழ் மன்றத்தின் நிறைவு விழா **01.04.2019** முற்பகல் **9.30** மணியளவில் நடைபெற்றது. முனைவர் **இரா.குமார்** வரவேற்புரை நல்கினார். தமிழ்த்துறைத் தலைவர் பேரா.**ம.துரை** அவர்கள் அறிமுக உரையாற்ற இக்கல்லூரி முதல்வர் முனைவர் **மா. இராஜேந்திரன்,** தலைமையேற்றுச் சிறப்பித்தார். கவிஞர் **நா. முத்துநிலவன்** அவர்கள் சிறப்புரையாற்றி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தனர்.முனைவர். **க. அமுதா** நன்றி நவில விழா இனிதே நிறைவுபெற்றது.

## கணிதவியல் துறை

அழகப்பா அரசு கலைக்கல்லூரி, முதுநிலை கணிதவியல் கழகத் துவக்க விழா **01.11.2018** அன்று முற்பகல் **10.00** மணியளவில் உமையாள் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் **மா.இராஜேந்திரன்** தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் கணிதவியல் துறைத் தலைவர் முனைவர் **S. சிந்தாமணி வஸ்திராணி** அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சிறப்புரையாற்றினார். துறைத்தலைவர் ஆலோசனைபடி விழாவிற்கான ஏற்பாடுகளை எமது துறைப் பேராசிரியர் **அ.பாலசுப்பிரமணியன்** மற்றும் துணைப் பேராசிரியர்கள் சிறப்பாகச் செய்தனர்.

தேசிய கணிதவியல் தினத்தை (டிசம்பர்-22) முன்னிட்டு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் **மருதை (Retd. Prof. & Head)** அவர்கள் எம்துறையின் முதுநிலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கு "**பகுப்பாய்வியலில் கணிதத்தீர்வு காண்பதற்கான நுட்பங்கள்**" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**26.2.2019** அன்று எங்கள் துறையின் முதுநிலை இரண்டாமாண்டு மாணவர் செல்வன் **பாண்டித்துரை,** முதுநிலை முதலாமாண்டு மாணவிகள் செல்வி **மெய்யேஸ்வரி** மற்றும் **உஷா** ஆகியோர் அழகப்பா பல்கலைக்கழக கணிதவியல் துறை மற்றும் **இராமனுஜர்** உயர்கணித மையத்தால் நடத்தப்பட்ட மாநில அளவிலான வினாடிவினா போட்டியில் பங்கேற்றனர்.

**16.3.2019** அன்று கணிதவியல் துறையின் முன்னாள் மாணவர்களின் சந்திப்பு விா நடத்தப்பட்டது. துறைத்தலைவர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**23.3.2019** அன்று கணிதத்துறை மாணவர்களுக்கு ரங்கோலிப்போட்டி நடத்தப்பட்டது. கணிதமன்ற நிறைவு விழாவில் பரிசுபெற்ற மாணவியர் கௌரவிக்கப்பட்டனர்.

### A PARADISE IN THE EARTH

There is a paradise
Even in the glorious Earth
We all will be there
Years after our birth
We learnt life things there as fast
And bade good - bye after a decade past
Gods are living there also
Blessing and teaching widen so,
We call them as "Teachers" now
But are also best "Preachers" how?
Budding blossoms are large in number,
That I never forget to remember.
Oh! There was a mammoth playground,
Where all our bliss lies around,
Marvellous trees are standing heroic,
Which are our immortal relic
Sharing and caring plays a role
That's the Paradise's major goal
Honey dews and Nectar fill all the Plates,
Offered by my friendly classmates.
Bleatings, Kneedowns, Cannings and knuckles
That we received with a tearful eyes.
Those were the horrible punishments we got
Are also healthy treatments; I realise if fast
No one can forget that golden days
That's nothing but our precious "SCHOOL DAYS"

by
**V. ASHABHARATHI**
(I- M.A. English)

## வேதியியல் துறை
## மன்ற நிகழ்வுகள்

வேதியியல் மன்றத் தொடக்கக் கூட்டமானது கல்லூரி முதல்வர் முனைவர் **M. இராஜேந்திரன்** தலைமையில் 12.03.2019 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முனைவர் **அ. பழனியப்பன்,** முதுநிலை ஆராயிச்சியாளர் மத்திய மின் வேதியியல் ஆராயிச்சி மையம், காரைக்குடி. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "வாழ்வியலில் வேதியியலின் பங்கு" என்ற தலைப்பில் சிறப்பாக உரையாற்றி மாணவர்களுக்கு அன்றாட வேதியியலின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.

இவ்வாண்டின் முத்தாய்ப்பு நிகழ்வாக இத்துறையைச் சார்ந்த ஆராய்ச்சி மாணவி **கு. சாந்தி** என்பவர் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் 23.08.2018 முதல் 12.09.2018 வரை நடைபெற்ற வேதியியல் புத்தாக்கப் பயிற்சியில் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் **அ. ஜான் ரெத்தினம்** மற்றும் முனைவர் **அண. செந்தில்குமார்** கலந்துகொண்டார்கள்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் 04.07.2018 முதல் 24.07.2018 வரை நடைபெற்ற வேதியியல் புத்தாக்கப் பயிற்சியில் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் **அ. நாகேந்திரன்** மற்றம் முனைவர் **நா.தினகரன்** கலந்து கொண்டார்கள்.

வேதியியல் துறையைச் சேர்ந்த மாணவிகள் **S. ஸ்ரீமதி, V. பிரியதர்ஷனி** மற்றும் **P. மனிஷா தேவி** நமது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் காரைக்குடி **CECRI LADIES FORUM** சார்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, படம் வரைந்து விளக்குதல் போன்ற போட்டியில் கலந்து கொண்டனர்.

### WATER SPEAKS

Oh! My dear comrades,
Why do you search in parades.
Do you remember me than,
I'm the soul of men.
You regarded me as "Goddess" once
Oh! It's all only spurious.
My painful tears are invisible
It's full of water; Oh! How horrible!
I begged you to save me better,
You prisoned me only in gutter,
Allow me to survieve in watershed,
Or you will be in the war of bloodshed.
It's only my warning
Or you'll be in morning.
I played in rivers of holy pilgrimage,
You made me as horrible drainage.
I heal all disease by my "Spa",
Tell me; Is there any flaw?
I flow round to flourish fields,
You lavished me for some Financial deals.
You sold me to garment industries,
Only for some "Cruel danties",
The delicious food I feed,
Why do you become my broken reeds?
Oh! What a perfidy?
I cheered you by my celestial rain
Why do you leave me in such a pain
Oh! My dear friends,
How you wasted me for "Petty Pence"
Oh! I'm Sure
This is the eleventh hour,
Save me atleast now
This creature is not your foe,
your cruelty may whatsover,
Still I'm the friend of you forever

by
**V. ASHABHARATHI**
(I- M.A. English)

## தொழில் நிர்வாகவியல் துறை



நமது கல்லூரியில் தொழில் நிர்வாகவியல் துறையின் சார்பில் நடைபெற்ற "**ஒரு நாள் மாணவ தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம்**" மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

இந்நிகழ்ச்சிக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக உயர்திரு. **J. ஜெயகாந்தன்** இ,ஆ,ப,. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்டம் அவர்கள் கலந்து கொண்டு தலைமை ஏற்றார். இந்நிகழ்ச்சியில் வரவேற்புரையினை நம் கல்லூரி முதல்வர் முனைவர் **மா.இராஜேந்திரன்** அவர்கள், இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் சிறப்பு விருந்தினர் மற்றும் மாணவர்களை வரவேற்றார். அதனை தொடர்ந்து தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாமினை திறம்படி நடத்திய திரு. **A. டேனியல் பிரேம்நாத்,** தமிழக அரசு கூடுதல் செயலர் அவர்கள் ஆற்றிய உரையானது மாணவர்களுக்குத் தொழில் முனைவோருக்கான தன்னம்பிக்கையைத் தந்தது. இந்நிகழ்ச்சியில் திரு. **S. கணேசன்,** பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சிவகங்கை மற்றும் திரு.**V.குமார்,** கிளை மேலாளர் காரைக்குடி, மாவட்ட தொழில் முதலீட்டுக் கழகம், ஆகியோர் கலந்து கொண்டு புதிய தொழில் துவங்குவதற்கம் அதனை செயல்படுத்துவதற்கும் உரிய ஊக்கத்தினை மாணவர்களுக்கு விவரித்தனர். இந்நிகழ்ச்சியில் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட பயனடைந்தனர். இறுதியாக சீரும், சிறப்புமான விழாவின் ஒருங்கிணைப்பாளரும், தொழில் நிர்வாகவியல் துறைத்தலைவருமான, முனைவர் **மு.தியாகராஜன்** அவர்கள் நன்றியுரையினைத் தெரிவித்து விழாவினைச் செவ்வனே நிறைவு செய்தார்.

### உழைப்பு

*உழுது கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு*
*அண்ணாந்து பார்க்கிறேன்*
*வண்ண வண்ண பறவைகள்*
*எத்தனை அழகாய்*
*எவ்வளவு மகிழ்ச்சியாய் பறக்கின்றன*
*எனக்கும் பறக்க ஆசை*
*உழுததை உழுதபடி போட்டுவிட்டு*
*நானும் பறந்தேன்*
*என்னோடு சிட்டுக்குருவிகளும், மைனாக்களும்*
*புறாக்களும் பறந்தன! ஆசையாய் பறக்கிறோம்*
*பசி! பசிக்க ஆரம்பித்தது*
*தரையில் இறங்கி உணவை தேடினேன்*
*என்ன ஆச்சரியம்! எங்கும் உணவு கிடைக்கவில்லை*
*எனக்கு மட்டுமல்ல! பறவைகளுக்கும் கூட*
*என்னைப் போலவே எல்லோரும் உழைப்பை*
*நிறுத்திவிட்டார்களா?*
*நிமிடம் கூட தாமதிக்கவில்லை*
*நிலத்தில் உழ ஆரம்பித்தேன்*
*இப்போது உணவுக்கு பஞ்சமில்லை*
*எனக்கும் மட்டுமல்ல*
*இவ்வுலகிற்கும்!*

முனைவர். **APS.செல்வராஜ்**

### நாடோடி

*நானொரு நாடோடி*
*கால்கள் மட்டுமே*
*எனது வீடு*

முனைவர் **எப்.பி.எஸ். செல்வராஜ்**
உதவிப்பேராசிரியர் பொருளியியல் துறை

# விலங்கியல் மன்றம்

தலைவர் : முனைவர் **அ.பனியடிமா,** துறைத் தலைவர்
அமைப்புச் செயலாளர் : பேரா. **மு.போதகுரு,** இணைப்பேராசிரிர்

இக்கல்வியாண்டின் விலங்கியல் மன்றச் செயலராக செல்வி **A.ஜெயலட்சுமி** மூன்றாம் ஆண்டு மாணவியும், இணைச் செயலாளர்களாக செல்வி **சீதாலெட்சுமி** மற்றும் **S.கலைவாணி** தேர்வு செய்யப்பட்டு மன்றம் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டில் விலங்கியல் மன்றத்தின் சார்பாக கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடந்தேறின.

| நாள் | நிகழ்ச்சி | தலைமை | சிறப்பு விருந்தினர்/குறிப்புகள் |
|---|---|---|---|
| 5-9-2018 | மன்றத் துவக்க விழா | முனைவர். M. **இராஜேந்திரன்**<br>முதல்வர் | முனைவர். **கார்த்திகேயன்**<br>உதவிப் பேராசிரியர்<br>அழகப்பா பல்கலைக்கழகம் |
| அக்டோபர் 2018 | துறை மாணவர்களுக்கான உள்ளிடைப் போட்டிகள்<br>1. பேச்சுப்போட்டி<br>2. கட்டுரைப்போட்டி<br>3. கவிதைப்போட்டி<br>4. ஓவியம் வரைதல்<br>5. வினாடிவினா<br>6. கைவினைப் பொருள் தயாரித்தல் | துறைப் பொறுப்பு ஆசிரியர்கள் | ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர் |
| 28/2/2019 முதல் 1/3/2019 வரை | கல்விச் சுற்றுலா | முனைவர். **அ.பனியடிமா**<br>முனைவர். **கு. சங்கர் பெருமாள்**<br>திரு. **SM. செல்வக்குமார்**<br>திருமதி. **ச. செலின் சாகய டெய்சி** | தென்தமிழகக் கடற்கரைப் பகுதிகள் மற்றும் கேரளா |
| 07/03/19 | மன்ற நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சிகள் | முனைவர். M. **இராஜேந்திரன்**<br>முதல்வர் | முனைவர். **B. வசீகரன்**<br>பேராசிரியர்,<br>அழகப்பா பல்கலைக்கழகம் |

**ஏப்ரல் 2018 பல்கலைக்கழகத் தேர்வில் மாணவர்கள் பெற்ற தரவரிசைப் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **G. இராஜலெட்சுமி** | III-B.Sc., | முதல் தரம் |
| 2. | **V. கார்த்திகா** | III-B.Sc., | நான்காம் தரம் |
| 3. | **S. உமாமகேஸ்வரி** | II-M.Sc., | நான்காம் தரம் |
| 4. | **R. பார்கவி** | II-M.Sc., | ஐந்தாம் தரம் |
| 5. | **P. செல்வி** | M.Phil., | முதல் தரம் |

# புவியமைப்பியல் துறை

**துறை மன்றச் செயல்பாடுகள்**

| தேதி | தலைப்பு | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|
| 27.06.2018 | Imaging Spectroscopy & Application | Dr. D. Ramakrishnan, IIT Bombay |
| 09.08.2018 | Implication of Climatic change on Ground Water | Dr. S. Chidambaram, Scientist, Kuwait water Research Institute,Kuwait. |
| 28.02.2019 | Introduction to Petroleum Geology | Mr. Subramaniyum, Fugro, Saudi Arabia |

**பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியல்: பி.எஸ்.சி**

| பதிவு எண் | பெயர் | தர வரிசை |
|---|---|---|
| 0114136003 | P. பிரகாஷ் இஸ்வர் | 1st |
| 0114136019 | K. அண்ணலட்சுமி | 2nd |
| 0114136022 | M. மலர்விழி | 3rd |

**பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியல்: பி.எஸ்.சி**

| பதிவு எண் | பெயர் | தர வரிசை |
|---|---|---|
| 0115324009 | N. பிரியங்கா | 1st |
| 0115324008 | K. கற்பகம் | 2nd |
| 0115324006 | R. சிவராமகிருஷ்ணன் | 3rd |

**ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வுகட்டுரை மற்றும் செயல்பாடுகள்:**

| தலைப்பு | பெயர் | ஆராய்ச்சி இதழ் |
|---|---|---|
| Emerging exploration strategy for coastal placer deposits ` | முனைவர் **ப. உதயகணேசன்** (இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்) திரு. **செ. தினேஷ்** (இளநிலை ஆய்வு உதவியாளர்) | International seminar on resource and sustainability (EROS - 2018), Central University of Karnataka, Kalaburagi (KA). |
| An Assessment on the Quality of Groundwater in and around Koviloor Sivaganga District, Tamilnadu, India | முனைவர் **ப. உதயகணேசன்** (இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்) திரு. **பா. பஞ்சநதம்** (கௌரவ விரிவுரையாளர்) | Seminar on “Sustainable Development and Management of Ground water Resource” (SDMGR - 2019). |
| Application of Imaging spectroscopy for the exploration of beach placer minerals | முனைவர் **ப. உதயகணேசன்** (இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்) திரு. **செ. தினேஷ்** (இளநிலை ஆய்வு உதவியாளர்) முனைவர் **தே. இராமகிருஷ்ணண்** (IIT Bombay) முனைவர் **வி. ஜெலவ்சன்** (NIO Goa) | World Ocean Science Congress (WOSC - 2019), Andhra University, Visakhapatinam Andhrapradesh |

| | | |
|---|---|---|
| High background radiation induced ecological aberrations | திரு. **செ. தினேஷ்** (இளநிலை ஆய்வு உதவியாளர்)<br>திரு. **SSN. சோமசுந்தரம்** (உதவிப் பேராசிரியர்)<br>முனைவர் **எ. உதயகணேசன்** (இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்) | |
| Application of remote sensing and GIS in land use land cover change cross**detection** in and around Karaikudi taluk, Sivagangai district Tamilnadu | திரு. **பா. பஞ்சநதம்** (கௌரவ விரிவுரையாளர்)<br>**க. முத்துலெட்சுமி** (2ம் ஆண்டு முது. அறிவியல்) | புவியியல் மற்றும் காலநிலை மாற்றங்கள் Holy College, Trichy - 2. |
| Sedimentary dynamics and depositional environment of Thondi coastal sediments, Ramanathapuram, Tamilnadu. | முனைவர் **க. ஜெயபால்** (கௌரவ விரிவுரையாளர்)<br>**இர. ஸ்ரீநிதி. ப.பொன்னழகு** (2-ம் ஆண்டு முது அறிவியல்) | |
| Petroliferous sedimentary basins in India | **மு.சங்கீதா, சி. சௌந்தர்யா** (2-ம் ஆண்டு முது அறிவியல்) | |
| Hydro geochemical studies and around Karaikudi town. | **இரா.ெ சளமியா, ஜெ. ராஜேஸ்வரி** (2-ம் ஆண்டு முது அறிவியல்) | |

## வற்றும் நதி

*வாழ்க்கை என்னும் ஓர் வற்றும் நதி*
*அதில் வாழத் துடிப்பது மனிதன் விதி*
*யாவும் மாயையென அறியா மதி*
*உனை அடிமையாக்குமே எல்லாம் சதி!*

*பொய்யும் மெய்யேற்றிப் பேசமடா*
*தினம் புகழுக்கு ஏங்கியே சாகுமடா*
*மெய்யும் பொய்யாய் மாறுமடா*
*தினம் வாழ்க்கை போலியாய் போகுமடா!*

*தன் மனம் தான் நன்று என்றிடுமாம்*
*தனயன்றி பிறர் கண்டு சிரித்திடுமாம்*
*பிறர் பாடும் துதிக்காக ஏங்கிடுமாம்*
*துதிபாடி மறந்தால் பொங்கிடுமாம்!*

*ஊருக்கே உபதேசம் செய்திடுவார்*
*தம் வீட்டிற்குள் அதன் பொருள் மறந்திடுவார்*
*பேருக்குப் பெருமையாய் வாழ்ந்திடுவார்*
*பிறர் வாழ்வில் தாழ்வென்றால் இகழ்ந்திடுவார்!*

*தன்னறிவு பாராட்டு விருப்பம் வரும்*
*தம் தவறை மறைக்கும் எண்ணம் வரும்*
*பிறர் பிழை தேடும் புத்தி வரும்*
*விசயமற்ற விமர்சிக்கும் வித்தை வரும்!*

*கள்ளைப் பாலாய்ப் பார்ப்பதுவோ*
*நிறத்தால் இரண்டையும் சேர்ப்பதுவோ*
*உண்மையைச் சொல்பவர் யார் எவரோ*
*அவரையும் பொய்யராய்ப் ஏற்பதுவோ!*

*நிலையில்லா வாழ்வெனத் தெரிந்துமே – மனம்*
*நிலைக்கப் பொய்பலச் சொல்லுமே*
*உண்மையே முன்வந்து நிற்பினும் – அதை*
*மனம் மறத்து புறம் தள்ளுமே!*

**கா. பாலபாரதி**
பெற்றோர் ஆசிரியர் கழக
கௌரவ விரிவுரையாளர்
ஆங்கிலத் துறை

## கணினி அறிவியல் துறை

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில், கணினி அறிவியல் துறையில் சுமார் 80 மாணவ / மாணவியர்கள் இரு சுழற்சிகளில் மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறார்கள். இம் மாணவ / மாணவியரின் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் 02.03.2019 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கணினி அறிவியல் துறையில் நடைபெற்றது.

இம்மாணவர்களின் வருகைப்பதிவு மற்றும் பாடங்களில் தேர்ச்சி விகிதம் தொடர்பான செய்திகள் பெற்றோர்களிடம் கூறப்பட்டது. இறுதிப்பருவத்தில் அனைத்து மாணவ / மாணவியர்களும் நன்கு பயின்று நல்ல முறையில் மதிப்பெண்கள் பெற்று அனைத்து மாணவ மாணவியர்களும் பட்டம் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று பெற்றோர்கள் முன்னிலையில் மாணவ / மாணவியர்க்கு எடுத்துக் கூறப்பட்டது.

அனைத்துப் பெற்றோர்களிடத்தில் இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இக்கூட்டத்தை முதல்வர் பொறுப்பில் இருந்த திரு.**ம.துரை** (தமிழ்த்துறை தலைவர்) அவர்கள் துவக்கி வைத்துச் சிறப்புறையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து துறைத்தலைவர் மற்றும் ஆசிரியர்கள் கல்லூரியின் சிறப்பம்சங்கள், துறையின் சிறப்பம்சங்கள், மாணவ / மாணவியரின் நன்னடத்தைப் பற்றி பெற்றோர்களுக்கு எடுத்துரைத்தனர்.
















# உடற்கல்வித்துறை

இக்கல்லூரியின் உடற்பயிற்சிப் பயிற்றுநர் திருமதி **G. தமிழ்மணி** அவர்களும், உடற்கல்வித்துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் **APS. செல்வராஜ்** அவர்களும் உடற்கல்வித்துறையில் திறம்படச் செயலாற்றி வருகின்றனர்.

அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற இறகுபந்து, கால்பந்து, சதுரங்கத்தில் பெண்கள் அணிகள் முதலிடம் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளன.

தடகளம், கால்பந்து, கபாடி, சதுரங்கம், பூப்பந்து, மேஜைப்பந்து போட்டிகளில் ஆண்கள் அணிகள் இரண்டாமிடம் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்ந்துள்ளன.

முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் மாவட்ட அளவிலான ஆண்கள் அணி பூப்பந்தில் முதலிடமும், பெண்கள் அணி பூப்பந்து, கைப்பந்தில் மூன்றாமிடமும் பெற்று நம் கல்லூரிக்கப் பெருமை சேர்த்துள்ளன.

நம் கல்லூரியிலிருந்து தடகளம், பூப்பந்து, இறகுபந்து, சதுரங்கம், கால்பந்து, குத்துச்சண்டை, கபாடி, கைப்பந்து போன்ற போட்டிகளில் இருந்து அழகப்பா பல்கலைக்கழக அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டு. அகில இந்திய அளவில் மற்றும் தென்மண்டல அளவில் ஆண்கள் பிரிவில் **12** மாணவர்களும் பெண்கள் பிரிவில் **17** மாணவியரும் ஆக மொத்தம் **29** மாணவ, மாணவியர் நம் கல்லூரியில் இருந்து அழகப்பா பல்கலைக்கழக அணிக்காக விளையாடி உள்ளனர் என்பதை உடற்கல்வித்துறை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில அளவில் மாற்றுத்திறனாளிகள் பிரிவிலிருந்து **S. சிவராஜன்** II-B.A (Eco) **R. சபரிநாதன்** III-B.Com இருவரும் இறகுப்பந்து, தடகளத்தில் பதக்கங்கள் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளளர்.

குத்துச்சண்டையில் **Y பிரியதர்சினி** (II-B.Sc., Maths) என்னும் மாணவி, மாநில மற்றும் நேஷனல் அளவில் பங்கு கொண்டுப் பதக்கங்களைக் குவித்துக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். **S. ஹரிகரன்** (II-B.Com) **Roller Skating** லும் **R. ரமணன்** (I-B.Com) கராத்தேவிலும் மாநில அளவில் வெற்றி பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். **R. ராஜேஸ்வரன்** (III-B.Com) **Special Olympic** க்குப் பாட்னர் ஆகச் சென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். **S. சிவராஜன்** II-B.A (Eco), உயரம் குன்றியவர்கள் பிரிவில் "சர்வதேச அளவில் இறகுப்பந்தில் இரண்டாமிடம்" பெற்று உடற்கல்வித்துறைக்கும் நம் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

நம் கல்லூரி உடற்பயிற்சி பயிற்றுனர் அழகப்பா பல்கலைக்கழக அணியின் பயிற்றுநர் மற்றும் மேலாளராகவும் தென்மண்டல அளவிலான பெண்கள் வலைகோல்பந்து போட்டிக்கு அழகப்பா பல்கலைக்கழகத்தின் **Organising committe Member** ஆகவும் பணியாற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



விளையாட்டு விழாவைக்கல்லூரி முதல்வர் முனைவர்
**மா. இராஜேந்திரன்** அவர்கள்
தேசியக்கொடியேற்றி தொடங்கி வைத்தார்கள்

**அழகப்பா அரசு கலைக் கல்லூரி**
(முதல் நிலைக் கல்லூரி, ஐந்து நட்சத்திரத் தகுதி பெற்றது)
**காரைக்குடி - 630 003.**

**உடற்கல்வித்துறை**

## 71-வது ஆண்டு
## கல்லூரி விளையாட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

2019 மார்ச் மாதம் **09-ம் தேதி சனிக்கிழமை** காலை 8.00 மணியளவில் பவுநகர் விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின் **71-வது** ஆண்டு விளையாட்டு விழா நடைபெற உள்ளது.

**09.03.2019 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில்**

முனைவர். **M.இராஜேந்திரன்**, M.Com., Ph.D.,
முதல்வர், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி.
விளையாட்டு விழாவைத் தொடங்கி வைப்பார்கள்

**09.03.2019 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில்**

திரு. **R.கிருஷ்ணராஜ்**, IPS
உதவி காவல் கண்காணிப்பாளர், தேவகோட்டை
சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்குவார்

**Dr. B.அருண்**, B.V.Sc.
துணைக் காவல் கண்காணிப்பாளர், காரைக்குடி
வாழ்த்துரை வழங்கவும்

அன்புடன் இசைந்துள்ளார்கள். ஆகவே தாங்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**முதல்வர்,**
**ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள்**
**மாணவ, மாணவியர்கள்**

**நிகழ்ச்சி நிரல்**

**09.03.2019 சனிக்கிழமை**

**காலை 8.00 மணி**
**விளையாட்டுப் போட்டிகள்**
**மற்றும்**
**தடகளப் போட்டிகள் துவக்க விழா**

மாலை 4.00 மணி
நிறைவு விழா

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. வரவேற்புரை
3. ஆண்டறிக்கை
4. சிறப்புரை
5. பரிசு வழங்குதல்
6. கலை நிகழ்ச்சிகள்
7. நன்றியுரை
8. நாட்டுப்பண்





**விளையாட்டு விழா நிறைவு விழாவில்**
**திரு. R. கிருஷ்ணராஜ் IPS அவர்கள்**
**(உதவிக் காவல் கண்காணிப்பாளர், தேவகோட்டை)**
**சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு**
**பரிசுகள் வழங்கினர். இவ்விழாவில்**
**Dr. B. அருண் B.v. Sc**
**(துணைக்காவல் கண்காணிப்பாளர், காரைக்குடி)**
**அவர்கள் வாழ்த்துரை நல்கினார்.**

# தேசிய மாணவர் படை

**Lt. A.P. நாகமுத்துவேல்** Associate NCC Officer

அண்ணாமலை பல்கலைகழகத்தில் **2(TN) Bn.** நடத்திய துப்பாக்கி சுடும் முகாமில் நமது கல்லூரி மாணவர்கள் **M. ஆனந்த்** II -B.Com மற்றும் **K. சந்தோஷ் குமார்** II-B.Sc (c.s) என்ற மாணவர்கள் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

மதுரையில் மதுரை குரூப் நடத்திய **Thal Sainik** முகாமில் **M. வசந்தி** II-B.Com., என்பவர் **IGC** வரை சென்றுள்ளார்.

**KPR College** கோயம்புத்தூர் குரூப் நடத்திய **RDC** க்கான **IGC** முகாமில் **M. கவியரசன்** II-B.Com., **R. சரோஜா** II-B.A. (Tami), **V. முத்துமாரி** II-B.com., ஆகிய மாணவ/மாணவியர் பங்குபெற்றனர்.

**Madras Group** சென்னையில் நடத்திய **CM** ரேலியில் **V. முத்துமாரி** II-B.Com., என்ற மாணவி பங்கு கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.


**Madurai Group** மதுரையில் நடத்திய **ALC** முகாமில் நமது கல்லூரி மாணவ , மாணவியர் **C. சிலம்பரசன்** II B.Sc.,(Maths), **M. பிரகாஷ்** II-B.Com., **G. தர்மதுரை** II-B.Com, **N. முனீஸ்குமார்** II-B.Com., ஆகியோர் பங்குகொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர் கலந்து கொள்ளும் **EBSB / NIC Campல் C. சிலம்பரசன்** II-B.Sc., (Maths), **M. பிரகாஷ்** II-B.Com., **K. அழகேஸ்வரி** II-B.Com., **SP.நவீன்** II-B.A., Tamil ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

செகந்தராபாத்தில் நடைபெற்ற **AAC** முமுகாமில் **R. ராஜகணபதி** II-B.Sc., (Maths), **ரவிகுமார்** II-B.B.A., ஆகிய இருவரும் கலந்து சிறப்பு செய்தனர்.

ஆகஸ்ட் **15, 2018** தினத்தன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் **R. சரோஜா** II-B.A., (Tamil), **K. அழகேஸ்வரி** II-B.Com., **M. கார்த்திக்** II-B.A., (Tamil), **P. மணிகண்டன்** II-B.Com., **G. வெங்கடேஷ், R. ரமனன்** II-B.Com., **R. சுவேதா** II-B.Sc., (Phy) ஆகிய மாணவ, மாணவியர் **Guard of Honour** நமது கல்லூரிக்குச் சிறப்பு செய்தனர்.

ஜனவரி **26, 2019** தினத்தன்று நடைபெற்ற குடியரசு தின விழாவின்போது **R. சரோஜா** II-B.A (Tamil), **R. அஜய்** II-B.Sc (Maths), M. **வசந்தி** II-B.Com., **I. விக்னேஷ்,** II-B.Sc.,(Bot), **M. கார்த்திக்** B.A (History), **B. இந்திரா விஜயதர்சனி** II-B.Com., **M. கவியரசன்** II-B.Com., **S. ஹரிஹரன்** II-B.Com., **G. வெங்கடேஷ்** II-B.com., **R. ரமனன்** II-B.Com., ஆகிய மாணவ, மாணவியர் **Guard of Honour** செய்து சிறப்புச் செய்தனர்.



## நுண்கலை மன்றம்

ஒருங்கினைப்பாளர் : **முனைவர் ச. முருகேசன்** (இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்)

### 2018 - 19 ஆம் கல்வியாண்டில்
### பெற்ற வெற்றிகளின் பட்டியல்

மதுரை சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி முத்தமிழ்க்கலைவிழா
ஒட்டுமொத்த முதலிடத்திற்கான சுழற்கோப்பைப் பரிசு

| பெயர் | வகுப்பு | போட்டி | பரிசு |
|---|---|---|---|
| வித்யாலெட்சுமி | II - பி.எஸ்சி கணிதம் | பரதநாட்டியம் | இரண்டாம் பரிசு |
| பி. நந்தினி<br>ஜெ. பவித்ரா தேவி<br>சி. கற்பகம்<br>அ. பவித்ரா<br>இரா. ஐஸ்வர்யா | II - ஆங்கிலம் | மௌனநாடகம் | முதற்பரிசு |
| கனிஷ்கா<br>மதுமதி | I - ஆங்கிலம் | ரங்கோலி | முதற்பரிசு |
| கே. அபிராமி<br>எம். ரம்யா<br>நிஷா<br>சுதா<br>எஸ். பிரியங்கா | II - ஆங்கிலம்<br>III - ஆங்கிலம்<br>I - ஆங்கிலம்<br>III - கணிதம்<br>III - இயற்பியல் | குழுநடனம் | இரண்டாம் பரிசு |

அழகப்பா பல்கலைக்கழக “அழகு ஆரம் (2019) கலைவிழாப் போட்டியில்
நுண்கலை மாணாக்கர் பெற்ற பரிசு பின்வருவமாறு.

| பெயர் | வகுப்பு | போட்டி | பரிசு |
|---|---|---|---|
| கணேஷ் | III - பி.காம் | பரதநாட்டியம் | முதற்பரிசு |
| அம்பிகா<br>பர்கானா | I - பி.காம் | பட்டிமன்றம் | முதற்பரிசு |
| சரஸ்வதி | II - பி.காம் | மெகந்தி | முதற்பரிசு |
| ராகவி செல்வம்<br>பி. நந்தினி<br>ஜெ. பவித்ரா தேவி<br>சி. கற்பகம்<br>பிரகாஷ்<br>சிலம்பரசன் | I - எம்.எசி இயற்பியல்<br>II - ஆங்கிலம்<br>II - ஆங்கிலம்<br>II - ஆங்கிலம்<br>II - பி.காம்<br>II - கணிதம் | குழுநடனம் | இரண்டாம் பரிசு |

# UNIVERSITY RANK HOLDERS (2017-2018)

| S.No. | Reg. No. | Name | Major | | Rank | Achievement |
|---|---|---|---|---|---|---|
| 1. | 011511101 | K. ABINAYA | B.A. | History | I | GOLD MEDAL |
| 2. | 0116302008 | P. PRIYA | M.A. | History | II | |
| 3. | 0116302003 | M. DEEPIKA | M.A. | History | III | |
| 4. | 0116302004 | R. KASTHURI | M.A. | History | III | |
| 5. | 0115158016 | A. MADHUBALA | B.A. | Economics | III | |
| 6. | 0116352004 | P. PANDIMEENAL | M.A. | Economics | I | GOLD MEDAL |
| 7. | 0115122027 | L. PRIYA | B.Sc. | Physics | II | |
| 8. | 0115122106 | K. BHUVANESWARI | B.Sc. | Physics | IV | |
| 9. | 0115122021 | S. MONIKA | B.Sc. | Phisics | X | |
| 10. | 0116312022 | U. SHARMILA BANU | M.Sc. | Physics | I | GOLD MEDAL |
| 11. | 0116312009 | M. KALPANA | M.Sc. | Physics | III | |
| 12. | 0116312014 | K. NANTHINI | M.Sc. | Physics | V | |
| 13. | 0115124030 | S. VISAYA | B.Sc. | Chemistry | IV | |
| 14. | 0115124008 | P. DEEPIKA | B.Sc. | Chemistry | VII | |
| 15. | 0116322009 | M. KOWSALYA | M.Sc. | Chemistry | I | GOLD MEDAL |
| 16. | 0116322014 | M. PRIYANGA | M.Sc. | Chemistry | IV | |
| 17. | 0116322022 | S. SIVAMASUNDARI | M.Sc. | Chemistry | V | |
| 18. | 0115125014 | J. NANDHINI | B.Sc. | Botany | I | GOLD MEDAL |
| 19. | 0115125024 | K. SELVARANI | B.Sc. | Botany | III | |
| 20. | 0116321013 | M. YUVARETHINA KUMARI | M.Sc. | Botany | II | |
| 21. | 0115126034 | G. RAJALAKSHMI | B.Sc. | Zoology | I | GOLD MEDAL |
| 22. | 0115126012 | V. KARTHIKA | B.Sc. | Zoology | IV | |
| 23. | 0116320014 | S. UMAMAHESWARI | M.Sc. | Zoology | IV | |
| 24. | 0116320007 | R. PARKAVI | M.Sc. | Zoology | V | |
| 25. | 0115136032 | P. PRAKASHESWAR | B.Sc. | Geology | I | GOLD MEDAL |
| 26. | 0115136002 | K. ANNALAKSHMI | B.Sc. | Geology | II | |
| 27. | 0115136009 | M. MALARVIZHI | B.Sc. | Geology | III | |
| 28. | 0116324003 | N. PRIYANKA | M.Sc. | Geology | I | GOLD MEDAL |
| 29. | 0116324002 | C. KARPAGAM | M.Sc. | Geology | II | |
| 30. | 0116324007 | M. SIVARAMAKRISHNAN | M.Sc. | Geology | III | |

| S.No. | Reg. No. | Name | Major | Rank | Achievement |
|---|---|---|---|---|---|
| 31. | 0115127025 | K. SIVAGAMI | B.C.A. | I | GOLD MEDAL |
| 32. | 0115127008 | M. ISHWARYA | B.C.A. | VII | |
| 33. | 0116314003 | P. DHIVYA | M.Sc. Computer Science | VI | |
| 34. | 0115151081 | M. UMADEVI | B.Com | I | GOLD MEDAL |
| 35. | 0115151035 | M. MEYYAMMAI | B.Com | II | |
| 36. | 0115151012 | P. DIVIYA | B.Com | IV | |
| 37. | 0115151108 | V. PERIYA KARUPPAN | B.Com | IV | |
| 38. | 011151072 | I. SUBHANITHA | B.Com | IV | |
| 39. | 0115151007 | K. BANUPRIYA | B.Com | IX | |
| 40. | 0116351016 | M. SUMITHRA | M.Com | IV | |
| 41. | 0116351006 | T. MEENAKSHI | M.Com | V | |
| 42. | 0115153019 | K. NIBIYA | B.B.A. | I | GOLD MEDAL |
| 43. | 0115153001 | SH. AMEERSITHIKA | B.B.A. | IX | |
| 44. | 0115153110 | B. KRITHIKA | B.B.A. | X | |
| 45. | 0117623007 | S. SIVARANJANI | M.Phil. Chemistry | I | GOLD MEDAL |
| 46. | 0117624003 | P. SELVI | M.Phil. Zoology | I | GOLD MEDAL |
| 47. | 0117622002 | M. VINUBHARATHI | M.Phil. Physics | I | GOLD MEDAL |
| 48. | 0117622001 | V. ANNALAKSHMI | M.Phil. Physics | II | |

## சிரிக்கும்

நீல வான ஓடையிலே
நிலவெழுந்து சிரிக்கும்
ஆடி நின்ற கடலினிலே
அலை எழுந்து சிரிக்கும்
பாடி நின்ற பாடலிலே
பல உணர்வெழுந்து சிரிக்கும்
சிற்பியின் கைவெட்டினிலே
சிலை வடிவே சிரிக்கும்
வானம் போட்ட தூறலிலே
வடிவாய் முகில் சிரிக்கும்
ஓவியன் தம் கரத்தினிலே
ஒன்றிய கற்பனை சிரிக்கும்
நல்ல தமிழ் சொல்லழகில்
வல்ல கவி சிரிக்கும்



முனைவர். **APS.செல்வராஜ்**

## நூலகம்
## ஆலோசனைக் குழு அறிக்கை

நூலகர் : திரு. ரா. மாடசாமி

**2018-2019** ஆம் கல்வி ஆண்டில் இக்கல்லூரி நூலகத்திற்கு மாணவர்கள் பயன்பெறும் வகையில் திட்டமில்லா நிதியின் மூலமாக ரூ.**2,50,000/- (**இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்**)** மதிப்பில் புதியதாக **759** புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்நூலகமானது மாணவர்கள் போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் பொருட்டு அதுசார்ந்த புத்தகங்கள், பருவ இதழ்கள் வாங்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மாணவ மாணவியர் படித்து பயன்பெறும் பொருட்டு **7** தினசரி நாளிதழ்கள் பெறப்பட்டு வருகிறன. **2019 - 2020** ஆம் கல்வி ஆண்டிற்காக, பயன்பாட்டில் இருக்கின்ற **N-List** எனும் இணையவழி பருவ இதழ்களின் ஆண்டுச் சந்தா புதுப்பிக்கப்பட்டுள்ளது. நூலகத்தில் இணைய வசதியினை மேம்படுத்தும் பொருட்டு புதியதாக ஒரு **D-Link Modem** ஒன்று பொருத்தப்பட்டுள்ளது மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பழுதடைந்த **402** புத்தகங்கள் ரூ. **11,256/-** செலவில் மறு கட்டுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளும் நூலக ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### MY FAVOURITE PROFESSOR

Hither, “World’s Best Sculptor”,
Carving stones into Sculpture,
Preaching great lectures
This world. An Imposture,
Benevolence! This Opal’s nature
Adore Almighty, Next to this “diety”!
Ouoth Great Culture

Omniscent’s advent; a fete,
With a bliss we greet
Scared as harce once
Muddle cleansed, Oh!
Forgive this dunce.

World’s Beacon! My great patron!
Words rare like a whip,
Sculptures hither never weep,
Chisel’s battered beats,
Mine’s idle, evils flee as bees.

Words but a waxing moon,
As bees in sunny noon,
To hear those nectar a boon,
Crown as a triumpher soon.

Months ten in womb,
Rest in peace in tomb,
Interim Crawled in battle,
This worm crushed brutal,
Vied and Vied, then I won;
Oh! Wonder all this sculptor done.

People as groves in crores,
An Eternal sun arose,
Blayed mine skills from coop,
Me never fade thy hope.
Oh!

Candle Hither melts and melts,
Adorn us more and more wise
Words emptied to praise,
Oh! “My External sun”,
Ever be rise and rise

by
**V. ASHABHARATHI**
(I- M.A. English)

## வேலை வாய்ப்பு முகமை
## (Placement Cell)


ஒருங்கிணைப்பாளர் : **மு. போதகுரு** (இணைப்பேராசிரியர், விலங்கியல்துறை)
இணை ஒருங்கிணைப்பாளர் : திரு. **த. ஆசைத்தம்பி** (உதவிப்பேராசிரியர், இயற்பியல் துறை)

இக்கல்வியாண்டில் **VR.யோகேஸ்வரன்** விலங்கியல் மூன்றாமாண்டு மாணவர் தேவகோட்டை அரவிந்த் கண் மருத்துவமனைக் கிளைக்குப் பணிவாய்ப்பு பெற்றுள்ளார். வேலை வாய்ப்பு முகமையும் சிவகங்கை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையும் இணைந்து **9.2.2019** முதல் **10.3.2019** வரை **UPSC, SSC, IBPS** மற்றும் **TNPSC** ஆகிய போட்டித்தேர்வுகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் **60** மாணாக்கர்கள் கலந்துகொண்டுப் பயனடைந்துள்ளனர். அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் நடத்திய வேலை வாய்ப்பு முகாம்களுக்கு மாணாக்கர்கள் பயன்பெறுமாறு ஆற்றுபடுத்தப்பட்டுள்ளனர்.

---

### உருவமில்லாத நிழல்

*அந்திசாயும் பொழுதில்*
*இலக்கை நோக்கி,*
*என்பயணம் தொடர*
*என்னைப் பின்*
*தொடரும் காரிருள்*
*யாரது? என்று*
*நான் வினவ*
*மௌனமே, என்பதில்*
*என்று ஒரு அசைவு...*
*உன்னைக் கண்டு*
*ஐயம் கொண்டு*
*ஓடினேன் வெகுதூரம்*
*தொடர்வண்டி போல....*
*தொடர்ந்தது என்பயணம்*
*குழப்பமான நேரம்*
*பாதியில் தடைபடுமோ*
*என் பயணம் என்ற*
*அலைபாயும் சிந்தனை*
*மனம் தடுமாறியது*
*விரைவாய் ஓடினால்*
*விடாமல் துரத்தினாய்...*
*ஓடிஓடி சோர்ந்தேன்*
*மறைந்தேன் மலையடிவாரத்தில்,*
*சிறிதுநேரம் இளைப்பாறினேன்*
*உன்னைக் காணவில்லை,*
*ஒருவழியாக ஒழிந்தாய்*
*என்று எண்ணினேன்...*
*நீ வெளியில் சிரம் நீட்டினால்*
*நீ என்னை எட்டிப்பார்க்கிறாய்*
*என்னைப் போலவே*
*சிந்தித்தேன் சில நொடிகள்....*
*அன்னப்பறவை தூயபாலை*
*பிரிப்பது போல....*
*தெளிந்தது என்மனம்*
*எதிர்த்து நின்றேன்*
*அஞ்சியது அவ்வுருவம்*
*பொழுது விடிந்தது*
*இருளும் விலகியது,..*
*என்முகமும் மலர்ந்தது.*
*பயணமும் முடிவடைந்தது*
*இலக்கை அடைந்ததனால்*
*காரணம், என்னவெனில்*
*தன்னம்பிக்கையோடு போராடினேன்,*
*இறுதி வரை!*



**P. சிந்து**
II B.Sc., (Maths) II-Shift

# நுகர்வோர் பாதுகாப்புக் குழு அறிக்கை

அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் **23.03.2019** அன்று நுகர்வோர் பாதுகாப்புக் குழு மூலமாக மாணவர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி காலை **11.30** மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது. விழாவின் தொடக்கத்தில் மூன்றாம் ஆண்டு பொருளியல் மாணவி **M. விஜி** வாழ்த்துரை வழங்கினார். பின்னர் நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் **Dr. M. ஜனார்த்தனன்பிள்ளை** அவர்கள்பொருளாதார துறைத்தலைவர் விழாவிற்கு வந்த சிறப்பு விருந்தினர் திரு. **கா.முருகானந்தன்** அவர்களை அறிமுகம் செய்தார். அதன் பிறகு கல்லூரி முதல்வர் முனைவர் **M. ராஜேந்திரன்** அவர்கள் தலைமை ஏற்கச் சிறப்பு விருந்தினர் சிறப்பு ஆற்றினார். நுகர்வோர்படும் துயரத்தையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை தெளிவாக எடுத்து உரைக்க அதைத் தொடர்ந்து இரண்டாம் ஆண்டு முதுகலை மாணவி **S. முத்துலெட்சுமி** நன்றியுரை வழங்கினார். விழாவில் நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் முனைவர் **R. ஹரிஹரன்** அவர்கள் கலந்துகொண்டார்.

## கார்மேகம்

*பாவம் மேகமகள்*
*அம்மா அப்பா இல்லாத*
*அனாதை போலும்*
*கருப்பாய் பிறந்தது அவள் குற்றமா?*
*அவளும் ஒரு பெண்தானே!*
*உறவுகளை பற்றிய ஏக்கம்*
*அவளுக்கு மட்டும் இருக்காதா என்ன*
*அதனால் தான் அவ்வப்போது மாறுவேடத்தில்*
*பூமிக்கு வருகிறாள்...*
*தூரத்து உறவினரான நம்மையெல்லாம்*
*காண மண்ணுயிர்க் கெல்லாம்*
*மழையாக...*

## வாய்ப்பு

*வாசலில் வரைந்த ஓவியத்தை*
*விட அழகாக இருந்தது*
*அதை மிதித்துச் சென்ற குழந்தையின்*
*கால்தடம்...*
*ஓவியனுக்கு ஒரே வாய்ப்பு*
*இதோ இது வரையப்படாத*
*ஓவியமோ என்று!*

## வானவில்

*எப்படி இருந்தாலும் அவளும்*
*ஒரு தமிழ்ப்பெண் அல்லவா?*
*உபசரிக்கும் விதம் அவளுக்கு*
*மட்டும் தெரியாதா என்ன?*
*இவளின் உபசரிப்பிற்கு ஒரு*
*தனிச்சிறப்பு தான்*
*இவள் வரவேற்க விரித்திருப்பது*
*ஒரு கம்பளி அல்ல!*
*ஏழு கம்பளிகள்*
*அதுவும் ஒரு வண்ணத்தில் அல்ல*
*பல வண்ணங்களில்*
*அனைவரும் அங்க வரப்போகும்*
*அந்த அதிர்ஷ்டசாலி*
*விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்...*
*மழையில் நனைந்து கொண்டே*
*பின்புதான் தெரிந்தது*
*அந்த விருந்தாளியே*
*மழைதான் என்று!*
*அதன் வரவேற்பாளரே*
*வானவில் என்று!*



**அ. வெண்ணிலா**
இளங்கலை முதலாமாண்டு BA தமிழ்

## பொது அறிவு துளிகள்...

1. இந்தியாவின் மான்செஸ்டர் எது?
   மும்பை
2. தமிழ்நாட்டின் மான்செஸ்டர் எது?
   கோயமுத்தூர்
3. ஷெல்லிதாசன் என்றழைக்கப்படுபவர்?
   பாரதியார்
4. குட்டித்தொல்காப்பியம் என்றழைக்கப்படும் நூல்?
   தொன்னூல் விளக்கம்
5. திராவிட ஆச்சாரியார் என்றழைக்கப்படுபவர் யார்?
   திருமழிசையாழ்வார்
6. திராவிட என்ற சொல்லை முதன்முதலில் கையாண்டவர் யார்?
   குமரிலப்பட்டர்
7. தமிழ்நாட்டின் பகத்திங் என அழைக்கப்படுபவர் யார்?
   வாஞ்சிநாதன்
8. இந்தியாவின் சிலிக்கான் பள்ளத்தாக்கு என அழைக்கப்படுவது எது?
   பெங்களூரு
9. மின்னல் அடிக்கும்போது உருவாகும் வாயு எது?
   நைட்ரஜன்
10. ‘நன்னூற் புலவன்’ எனப் போற்றப்படுபவர் யார்?
    சீத்தலைச்சாத்தனார்
11. ‘சட்டம் இல்லையேல் சுதந்திரம் இல்லை’ எனக்கூறியவர்?
    லாஸ்கி
12. உலகிலேயே முதல் மிகப்பெரிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் எங்கு உள்ளது?
    சீனா
13. கிரெடிட் கார்டு வழங்கிய முதல் இந்திய வங்கி எது?
    சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா
14. உலகின் முதல் செயற்கை கோளின் பெயர் என்ன?
    ஸ்புட்னிக் 1
15. தபால் தலையில் முதலில் இடம் பெற்ற இந்தியர் யார்?
    மகாத்மாகாந்தி
16. உலக இரத்த தான தினமாக கொண்டாடப்படும் நாள் எது?
    அக்டோபர் 1
17. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
    நெதர்லாந்து
18. மனித இரத்தத்தை ஏற்றுமதி செய்வதில் முன்னனி வகிக்கும் நாடு எது?
    அயர்லாந்து
19. உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒருவருட காலம் பதவி கொடுக்கும் நாடு எது?
    சுவிட்சர்லாந்து
20. உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன?
    12500


**R. இளம்பரிதி**
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

## பெண்

*பெண்ணே! உயர்ந்துவா!*
*உன்பின்னே கூறியவர் முன் எழுந்துவா உன் குறிக்கோளை அடைவதற்கு ஆயிரம் தடைகள் வரும்*
*நீ உயர்ந்தபின் அவை தடைகளாக தெரியாது தன்னம்பிக்கைகளாகவே அவை தெரியும்*
*நாளை உலகம் நமக்காய் விடியும் என்று போராடு – போராடிக் கொண்டே இரு...*
*நாம் வெற்றி பெறுவது நிச்சயம்*
*வெற்றி என்பது வேடிக்கை பார்ப்பவருக்குக் கிடைப்பதல்ல...*
*வெறியோடு போராடுபவருக்கு மட்டுமே கிடைப்பதாகும்.*

## தாய்

*என் ஐந்து வயதில் அப்பனை இழந்தியடி*
*ஆதரவிற்கு யாருமின்றி அனாதயாக நின்றியடி*
*கல்வோடச்சு தூக்கின்ன என்ன*
*இப்ப காணவில்லையே உன்ன*
*காலங்கள் மறையலாம் உன் கவிதைமொழி மறையுமோடி*
*காலங்கள் எல்லாம் கருவரையானது*
*உன் கல்லறை ஒருநாள் கற்பனையாகுமோ?*
*கற்பனை என்றால் கடவுளுக்கு நன்றி!*



**வீ. பஞ்சு**
B.B.A., I-Year

## பெண்மையின் வரையறை

*உத்திரத்தின் அருகே*
*உறங்காமல் தவிக்கிறேன்...*
*குருதி எல்லாம்*
*உதிரியாய் போகின்னுறன....*
*அடிவயிற்றில் அடங்காத வலி*
*குனிந்தால் குறுக்கு வலி*
*அணைப் போட்டாலும்*
*தடுக்க இயலாதோ*
*குருதியின் பெருக்கை....*
*முடிந்தவரைப் பொறுக்கிறேன்*
*முயலாத நேரத்தில் பொறுமுகிறேன்*
*மூன்று நாளை எண்ணி*
*முப்பது நாளும் போராடுகிறேன்*
*பெண்களை படைத்த ஆண்டவனே*
*பொறுமையும் வெகுமதியாய்*
*படைத்தது இதற்காக தானோ??*
*விடிந்தால் கணக்கோ மூன்று*
*முடிந்ததே என்று பெருமூச்சு....*
*தோழியே*
*இன்று நான், நாளை நீ*
*பெண்களாய் பிறந்துவிட்டோம்...*
*மூன்றை எண்ணி மூலையடில் முடங்காதே*
*அது முப்பதிலும் விடைப் பெறாதே....*
*முடிந்த வரை முன்னேறி வா*
*வலியும் வீணைப்பாடும்*
*பெருமை நமதே!!!!*

**சு. முத்துமீனாள்**
II-B.Sc., Maths
II-Shift



## விவசாயியின் ஏக்கம்

சிறுசிறு தூறலில்
சிதறும் மனது
மண்ணில் விழுந்து
மக்களை மகிழ்விக்கும் விருந்து
கூடினால் வெள்ளம்
குறைந்தால் பஞ்சம்
அளவாகப் பெய்து
மக்கள் வளமாக வாழ மனது வை மழையே!
வருண பகவானே!
ஆனால் சிறிது காலமாக நீர்
இந்த மானுடர்கள் மீது கோபம் கொண்டது சரிதானோ?
தந்தையாகிய உமக்கு கோபம் கொள்ள உரிமை உண்டு.
ஆனால் உம் கோபத்தால் தண்டிக்கப்பட்டவன்
ஏழை விவசாயி அன்றோ?
மழை வரும் என்று நம்பி பயிரிட்டான்.
ஆனால் நீர் வராமல் தண்டித்தீர்கள்
மீண்டும் கடன் வாங்கி பயிரிட்டான்
இம்முறையும் ஏமாற்றமே....
விளைச்சல் இல்லை ஆனால்
வீட்டின் வாயிலிலோ கடன்காரரின் தொல்லை
செய்வதறியாது இறுதியில்
தன் உயிரை மாய்த்துக்கொள்கிறான்...
அவனது குடும்பத்தின் அவல நிலை
கண்டுமா உமது மனம் மாறவில்லை?
உமது புதல்வர்களாகிய எங்களின்
தவறை மன்னித்து மீண்டும்
இப்புவிக்கு தரிசனம் தருவீர்களா...?
ஏக்கத்துடன் ஒரு ஏழை விவசாயியின் மகள்



**C. சோலை உமா**
I-B.Sc., II-Shift (Dept. of Physics)

## அம்மா


அம்மா அம்மா அம்மா
உன் உயிர் மூச்சை
என் உயிரி மூச்சுடன் இணைத்தாய்
உன் தொப்புள் கொடியுடன்!
உன் உதிரத்தை என் உணவாக மாற்றினாய்
என் மனதில்
தமிழ் உணர்வை ஊட்டினாய்
என்னை முழுமையான மனிதனாய்...
உருவெடுக்கச் செய்தாய்
அதனால்தான் என்னவோ
உன்னைவிட்டுப் பிரியும்
ஓரிரு நொடிகள் கூட
என் உயிர் என்னைவிட்டுச்
செல்வதாய் உணர்கிறேன்
என் உயிர் நீயே அம்மா



**ர. ஷம்யுக்தா**
இளங்கலை முதலாமாண்டு
(பி.ஏ. தமிழ்)

## என் தோழி அனிதா

மௌனத்தைக் கண்டு வியக்கிறேன் பிறக்கும் போதே பிரிந்தாள் தாயை – உயிர்
பிரியும்வரை மருத்துவராக வேண்டும் என்று நினைத்தாயே
மருத்துவராகி உயிர்காக்க நினைத்தாயே – மனதில்
என்ன நினைத்தாயோ? சொல்லடி பெண்ணே
கனவு கண்டதை நினைவாக்க முயன்று இப்படி
உன் உயிர்காக்க மறந்தாயே கண்ணே
பிறர் கண் இமைக்கும்படி வாழவேண்டிய நீ
இப்படி கண்மூடி விட்டாயே என் தோழியே!



**லெ. பாரதி**
விலங்கியல் துறை, இரண்டாம் ஆண்டு

## கவிதை

அலி என்ற அடையாளத்தில் அடைபட்ட சிறகாய்
சிறைபட்ட குருவியாய் கறைபட்டு போனோமே
எண்களால் மதிப்பிடப்பட்டோம் – வீண்
சொற்களால் சபிக்கப்பட்டோமே
தாய் என்ற அன்பை – நாங்கள்
இழந்தோமே
தந்தையின் தவிப்பை – எங்கள்
சிந்தையால் உணர்ந்தோமே.
சேலையோடு பொட்டணிந்து – தாங்கள்
சாலையோரம் நடந்தாலோ
பூனை கண்ட மீனாக
பூதவுடல் இழந்தோமே
கடவுளின் பிள்ளை யென – நாங்கள்
கதை பாட வந்தோமே...





**K. ANBU DEEPIKA**
I-B.A., English

## அறிவோம் செய்திகளை

1. உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பு சட்டம்
“இந்திய அரசியலமைப்புச் சட்டம் “
2. மன்னிப்பு என்ற சொல் எந்த மொழியை சார்ந்தது
“உருது மொழி ”
3. காஃபி என்ற சொல்லின் தமிழ் பொருள்
“குளம்பி அல்லது கொட்டை வடிநீர் ”





**V. KARTHIGA**
III-B.A., English

## வருங்கால பாரதம்

உழைக்கக் கரம் இருந்தும்
வேலையில்லா வறுமை
வெட்கத்தை மறந்து
பிச்சை எடுக்கும் நிலைமை
தவறான பாதையில் தவறிப் போன
தந்தையின் கையில் மது
அதனால் அந்தக் குழந்தைக்கு
இளமையிலே வறுமை
உறவுகள் பல இருந்தும்
குழந்தை தெருவில் நிற்கும் நிலைமை
அறியா வயதில் பிள்ளையின்
கையில் பிச்சைப் பாத்திரம்
புத்தகம் இருக்கும் கரங்களில்
குற்றத்தின் கரைகள்
மீள முயற்சித்தும் மீள முடியவில்லை
இளந்தலைமுறை இழந்தது கல்வி
விளைச்சல்....
வருங்கால பாரதம்
மீண்டும் வறுமையில்...




**V. குணா சௌமியா**
B.Sc., Zoology

## திரும்பி பார்


ஏழைகளுக்கு இருக்க இடமில்லை
இருந்த இடத்திலும் வாழ விடவில்லை
உடுத்த உடையில்லை
கிழந்த உடைகளுக்கு மதிப்பில்லை
உண்ண உணவில்லை
இருப்பதை உண்பதற்கு மனமில்லை
எங்களிடம் பணம் இல்லை
இதனால் சிலருக்கு வாய்ப்பளிக்க மனமில்லை
எங்களிடம் எதுவும் இல்லை
என்றாலும் திறமை உண்டு – ஆனால்
அத்திறமையைத் திரும்பி பார்க்க யாருமில்லை
புத்தகம் தூக்க மனமுண்டு
ஆனால் அதற்கு வழியில்லை
முன்னேற ஆசையுண்டு
எங்கள் ஆசைகளை உடைக்க வழியுமுண்டு
விண்மீன் பிடிக்க ஆசை உண்டு
அதற்குச் செல்லத்தடைகளும் உண்டு
தடைகளை உடைத்து தரணிபோற்ற
முயற்சியே வித்து



**மு. ரஞ்சனா**
B.B.A., I-Year



**R. MUTHARASI**
III-Year, B.A., English





**G. NANDHINI**
II-B.S.c., Maths (II-Shift)

## மௌனம்

மௌனத்தில் சிறந்தவளோ நீ – உன்
மௌனத்தைக் கண்டு வியக்கிறேன்...
பேச்சில் மயக்கியவளே! எதற்க்காக இம் மௌனம்
பேச வார்த்தையில்லையா! இல்லை என்னிடம்
பேசுவதற்கு ஏதுமில்லையா!
மௌனத்தில் என்னை சிறைபிடித்தவளே!
உன் கண் பேசும் மௌன இசை என்னை இழுக்கிறது
தினமும் நினைக்கிறேன் உன்னை – நீ
ஒருமுறையாவது என்னிடம் பேசி விடமாட்டாயா என்று
அதன்பிறகு ஆயிரம் அர்த்தம் – உன்
மௌனத்தில் என்ன அர்த்தம்
மையலில் மயங்க விரும்பியவனை – உன்
மௌனத்தில் மயக்கி விட்டாய், மௌனத்தின் அழகியே!
உன் மௌனம் எனக்கு சம்மதம்
நீ சொல் அந்த நாளை, உன் உயிர் தேடி நான் வருகிறேன்
உன் மௌனத்தில் என்னை இணைத்திட
சங்கமிக்கும் முக்கடலின் அசையும் – உன்
மௌனத்தில் அமைதியாகிறது – உன்
மௌனத்திற்கு ஈடாகுவாளோ அந்த ரதி
அவள் அழகி என்றால், நீ பேரழகி
உன் மௌனத்தின் எல்லை உன் கோபமோ!
அதுவும் அழகுதான் உன்னில் காணும்போது
பார்த்த நாளெல்லாம் பரவசமாக்கினாய்
பார்க்காத நாளெல்லாம் பைத்தியமாக்கினாய்
இந்த மௌனத்தில் என்னை கொல்லப்போகிறாயா?
சொல்! உன் மௌன போதனை என்று தொடங்கியதோ!
அன்றே என் மரண நாளும் தொடங்கியது
காத்திருக்கிறேன் என் மரணத்திற்காக!
என் தேவதையே உன் மடியில் என்றால்...



**அ. ஐஸ்வர்யாராய்**
இளங்களை (கணிதம்)
II-Year, II-Shift





**கு. சங்கீதா**
தொழில் நிர்வாகவியல் துறை
இரண்டாமாண்டு மாணவி

**அழகப்பா அரசு கலைக் கல்லூரி,** காரைக்குடி - 3.

**ஆண்டு மலர்க்குழு 2018 - 2019**

| | | |
|---|---|---|
| மலர்க்குழு ஆசிரியர் | : | முனைவர் **மா. இராஜேந்திரன்**<br>முதல்வர் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் **இரா. குமார்**<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை |
| உறுப்பினர்கள் | : | திரு **இரா. இராஜண் கணபதி**<br>ஆங்கில உதவிப் பேராசிரியர் |
| | | திருமதி **அ. சுந்தரி**<br>ஆங்கில உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **எம். கருணாகரன்**<br>இயற்பியல் உதவிப் பேராசிரியர் |
| | | முனைவர் **க. அர்ச்சுணன்**<br>கணிதவியல் உதவிப்பேராசிரியர் |

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Alagappa Govt. Arts College Karaikudi - 630 003. |
| 2. Periodicity of its Publication | : | Annual |
| 3. Language | : | Tamil and English |
| 4. For whom it is circulated | : | Among the members of the staff<br>and students of this college. |
| 5. Printer's Name<br>Nationality<br>Address | : | Sri Lakshmi Printers<br>Indian<br># 2A, Subramaniyapuram,<br>1st Street, Karaikudi - 2. |
| 6. Editor's Name<br>Nationality<br>Address | : | Dr. R. Kumar<br>Indian<br>Associate Professor<br>Research Dept. of Tamil<br>Alagappa Govt Arts College.<br>Karaikudi - 3 |
| 7. Publisher's Name<br>Nationality | : | Dr. M. Rajendran<br>Indian<br>Principal, Alagappa Govt Arts<br>College. Karaikudi - 3 |

Certified that the above particulars are true to the best of my knowledge.

\- Editor

## கல்லூரியின் வளர்ச்சிக்கு முனைப்புடன் பணிபுரிந்து பணி நிறைவு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள்



முனைவர். **மா. இராஜேந்திரன்** M.Com., Ph.D.,
முதல்வர்



முனைவர். **ஜா. அல்பேரிஸ்**
வரலாற்றுத்துறை, இணைப் பேராசிரியர்




முனைவர். **மோ. ஜனார்த்தனன் பிள்ளை**
பொருளியல் துறை, உதவிப்பேராசிரியர்



முனைவர். **செ. செல்வராஜ்**
வரலாற்றுத் துறை உதவிப்பேராசிரியர்



திரு. **தெய்வேந்திரன்**
பதிவறை உதவியாளர்



திரு. **ரெ. மாரீஸ்வரன்**
சிறப்புநிலை ஆய்வக உதவியாளர்



திரு. **இரா. மருதுபாண்டியன்**
சிறப்புநிலை ஆய்வக உதவியாளர்



திரு. **கு. இராஜேந்திரன்**
சிறப்புநிலை ஆய்வக உதவியாளர்



